# கள்ளர்குலத் தொண்டைமான் பரம்பரை

முன்னுரை :

கள்ளர், மறவர், அகமுடையார் என்ற மூன்று சமூகத்து மக்களை முக்குலத்தோர் என்றழைப்பர்.

முக்குலத்தோரில் ஒருவரான கள்ளர் ஒரு பிரிவைச் சேர்ந்தவர்கள் தொண்டைமான்கள். அதனால்தான் தொண்டைமான் சமூகத்தவரைக் " கள்ளர் குலத்தொண்டைமான் " என்று குறிப்பிட்டுச் சொல்லுவர்.

தொண்டைமான் மரபிலே, நாடாண்ட காவலர்கள் உண்டு. காவலர்களே பாவலர்களாகவும் பாடியதுண்டு. படைத்தலைவனாயும் இருந்ததுண்டு. உடல் உறுதி கொண்டு உழைத்த மக்கள் சமுதாயமும் இருந்ததுண்டு.

மக்கள் ஆட்சி மலர்ந்திருக்கும் இன்றைய நாட்டில், மன்னர் ஆட்சிக்கு இடமில்லை என்றாலும் தத்தம் இருப்பிடங்களிலிருந்து புலம் பெயர்ந்து பல்வேறு இடங்களுக்கும் சென்று குடியேறி, கள்ளமிலா தொழில் பல செய்து வாழ்ந்த அக் கள்ளர்குலத் தொண்டைமான் மரபினரை இன்றைக்கும் பல ஊர்களில் காணமுடிகிறது.

1 . 0 . யார் இந்த கள்ளர் ?

ஆந்திர மாநிலத்திலுள்ள திருப்பதியின் அடர்ந்த காட்டுப் பகுதிகளில் ஒரு கூட்டத்தினர் வாழ்ந்து வந்திருக்கின்றனர். அவர்களைக் " கள்ளர் ' எனக் குறிப்பிடுகின்றது புதுக்கோட்டை சமஸ்தான வரலாறு.

கள்ளர்களை நாகர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்று சிலபேரும் சோழர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்று சிலபேறும் பல்லவர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்று சிலபேரும் கூறுவதாக ந.மு. வேங்கடசாமி நாட்டார் குறிப்பிட்டிருக்கிறார்.

[ ந. மு. வேங்கடசாமி நாட்டார், கள்ளர் சரித்திரம், பக் - 21 ]

1 . 1. கள்ளர் குல உட்பிரிவுகள் : - புலம்பெயர்ந்து குடியேறிய இடங்கள்

கள்ளர் குலத்தில்,

1. மாணிக்காரன்
2. பன்றிகொன்றான்
3. பின்பன்றி கொன்றான்
4. காடு வெட்டி
5. மேனத் தரையன்
6. பல்லவராயன்
7. தொண்டைமான்
8. இராங்கியன்
9. போர்ப் பன்றி கொண்டான்
10. கவிபிரான்

என 10 வீட்டுப் பிரிவினர் உள்ளனர். ' அரசு ' என்று சொல்லப்படும் இந்த 10 வீட்டுப் பிரிவினரும், ஓர் காலகட்டத்தில் தம் இருப்பிடத்தை விட்டுப் புலம் பெயர்ந்து தஞ்சைக்குத் தெற்கே உள்ள அம்புக் கோவில் என்ற இடத்தில் குடியேறி வாழ்ந்திருக்கின்றனர். பின்னர் அங்கிருந்து புறப்பட்டு நாலாப் பக்கங்களுக்கும் சென்றிருக்கின்றனர்.

1. பிலா விடுதி
2. கரம்பக்குடி
3. வடக்கலூர்
4. நெய்வேலி
5. கல்லாக் கோட்டை
6. நரசியன் பட்டி
7. அம்மனிப் பட்டி
8. பந்துவாக் கோட்டை
9. மங்கல வெள்ளாள விடுதி ஆகிய இடங்களுக்குச் சென்று குடியேறி இருக்கின்றனர்.

[ வாழ்வியல் களஞ்சியம், VOL - 10, தஞ்சை பல்கலைக் கழக வெளியீடு ]

## 1 . 2 . கரம்பக்குடி கள்ளர் மரபினரே புதுக்கோட்டை தொண்டைமான் அரசின் தோற்றத்திற்கு மூல காரணம்

ஸ்ரீ ரங்கராயர் என்ற விஜயநகர அரசன் கரம்பக்குடி வழியாக இராமேஸ்வரம் சென்றபோது அவரது யானை மதங்கொணடு பல சேதங்களை ஏற்படுத்தியிருக்கிறது. அப்பொழுது ஆவுடை ராயத் தொண்டைமான் என்பவர் வீரத்தோடு அந்த மதயானையை அடக்கி அரசன் முன் கொண்டுவந்து நிறுத்தி இருக்கிறார். அதனால் அகமகிழ்ந்த அரசன் ஆவுடை ராயத் தொண்டைமானுக்கு

ராய ராகுத்த ராய வசுரீடு
ராய மன்னீடு ராய

என்ற பட்டதையும், நிலங்கள் பலவற்றையும், அரசர்களுக்கு மட்டுமே உரிய  அம்பாரி யானை, முரசு யானை, சிங்கமுகப் பல்லக்கு ஆகியவற்றையும் வழங்கியிருக்கிறார். அத்தோடு, அவற்றை வைத்துக்கொள்ளும் உரிமையினையும் வழங்கியிருக்கிறார். ராஜ மரியாதைகள் அனைத்தையும் வழங்கியிருக்கிறார்.

இது குறித்து, சீரஞ்சீவி என்பவர், ' ஆவுடை ராயத் தொண்டைமானின் வீர தீரச் செயல்கள், பிற்காலச் சந்ததியினர் அரச அந்தஸ்த்தைப் பெற வித்திட்டிருக்கின்றன ' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

[ சிரஞ்சீவி புதுக்கோட்டை சமஸ்தான வரலாறு ]

### 1 . 2 . 1 .யார் இந்த ஆவுடை ராயத் தொண்டைமான் ?

புதுக்கோட்டை அரசின் அரசவைக் கவிஞராய் இருந்த வெங்கண்ணா என்பவர், ' தொண்டைமான் வம்சாவளி ' என்ற ஒரு தெலுங்குக் காவியத்தை இயற்றியிருக்கிறார். அதன் மூலம் கரம்பக்குடி கள்ளர் மரபினரின் வழித்தோன்றல்கள் 15 பேர்களில், 14 - ஆவது வழித்தோன்றல் பச்சைத் தொண்டைமான் என்பது, அவரது மகனே ஆவுடை ராயத் தொண்டைமான் என்பது புலனாகிறது.

இதன் மூலம், கரம்பக்குடி கள்ளர் மரபினரே, புதுக்கோட்டை தொண்டைமான் அரசு தோற்றத்திற்கு வித்திட்டவர் என்பது உறுதியாகிறது.

## 2 . 0 . கள்ளர் குலத் தொண்டைமான்கள்

கி. பி. 2, 3 - ஆம் நூற்றாண்டுகளில் தமிழகத்தின் வட எல்லையாக விளங்கிய ' வட வேங்கடம் ' தற்போது ஆந்திர மாநிலத்தோடு சேர்க்கப்பட்டு, திருப்பதியாகிவிட்டது. காடுகள் அடர்ந்த அப்பகுதியில் கள்ளர் மரபினர் வாழ்ந்து வந்திருக்கின்றனர். குடக்கரை, தொண்டைமான் கோட்டை, பொற்குப்பி என்ற மூன்று பிரிவுகளாக அப்பகுதி இருந்திருக்கிறது. இதில், ' தொண்டைமான் கோட்டை ' யில் வசித்த கள்ளர்கள், " கள்ளர் தொண்டைமான்கள் " ஆவர்.

## 2 . 1 . கள்ளர் தொண்டைமான்களின் தொழில்கள், சேவைகள்

கள்ளர் தொண்டைமான்கள் உடல்திறனிலும், உள்ளத்து உறுதியிலும் வலிமை மிக்கவர்களாகத் திகழ்ந்திருக்கிறார்கள். அதனால் அவர்கள்,

1. யானைகளைப் பிடித்தல், அவற்றைப் பழக்குதல்
2. பிற அரசர்களுக்குப் படைத் தளபதியாக, படைத் துணையாக நின்று உதவுதல்
3. போரில் பங்கேற்றுச் சிறப்புடன் போர் புரிதல்

போன்ற அருந்தொழில் பல ஆற்றியிருக்கின்றனர். அத்துடன் விவசாயத்திலும் சிறந்து விளங்கியிருக்கிறார்கள்

இவர்களில் சிலர், 10, 11 ஆம் நூற்றாண்டுகளில் தெற்கு நோக்கிச் சென்று பல பகுதிகளில் குடியேறி இருக்கிறார்கள்.

[ புதுக்கோட்டை சமஸ்தான வரலாறு ]

## 2 . 2 . சங்ககாலத்தில் தொண்டைமான் மன்னர்கள் ;

சங்ககாலத்தில், காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட தொண்டைமான் மன்னன் " தொண்டைமான் இளந்திரையன் " ஆவான்.

இவன், தன் தந்தையாகிய சோழன் கிள்ளி வளவனுக்குப் பின், கிள்ளி வளவனுடைய ஆட்சிக்கு உட்பட்டிருந்த வடபகுதிக்கு மன்னனாக ஆக்கப்பட்டவன்.

24 கோட்டங்களையும், 79 உட் கோட்டங்களையுங்கொண்ட தமிழகத்தின் வடபகுதி, ' தொண்டை மண்டலம் ' என்று இவனது பெயரிலேயே வழங்கி வந்திருக்கிறது.

[ வாழ்வியல் களஞ்சியம், VOL - 10, தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீடு ]

தொண்டைமான் இளந்திரையன் பெயரால் ' திரையனூர் ' என்ற ஊர் ஒன்றும் இருந்திருக்கிறது.

' பெரும்பாணாற்றுப் படை ' யின் பாட்டுடைத் தலைவனாக விளங்கியவனும் தொண்டைமான் இளந்திரையன் ஆவன் [ கடியலூர் உருத்திரங் கண்ணனார், பெரும்பாணாற்றுப்படை, பத்துப் பாட்டு ]

2 . 2 . 1 . தொண்டைமான் - காரணப் பெயரா ? மரபுப் பெயரா ?

சோழ மன்னன் வென்வேற் கிள்ளிக்கும், நாகர் தலைவன் வலைவணன் என்பான் மகள் பீலி வளைக்கும் பிறந்தவன் தொண்டைமான் இளந்திரையன். அவனை அவன் தந்தையாகிய கிள்ளி வளவனிடம் ஒப்படைப்பதற்காக கப்பலில் வணிகர்கள் கொண்டு வந்துகொண்டிருந்தனர். அப்போது கப்பல் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. தொண்டைக் கொடியால் சுற்றப்பட்டிருந்த குழந்தை, இளந்திரைகளால் ( அலைகளால் ) கரை ஒதுங்கியது. ஒதுங்கிய குழந்தையை மன்னனிடம் ஒப்படைத்தனர் மக்கள்.

தொண்டைக் கொடியால் சுற்றப்பட்டிருந்தமையால் " தொண்டைமான் " என்றும், அலைகளால் அடித்துவரப்பட்ட குழந்தை ஆதலால் 'இளந்திரையன்' என்றும் அழைக்கப்பட்டதாக இலக்கியங்கள் சொல்கின்றன.

[ 1. உருத்திரங் கண்ணனார், பெரும்பாணாற்றுப்படை

2. சீத்தலைச் சாத்தனார், மணிமேகலை. ]

இளந்திரையனுக்குச் சொல்லப்படும் இந்தக் காரணப் பெயரை ந. மு. வேங்கடசாமி நாட்டார் மறுக்கிறார். இளந்திரையன் வருவதற்கு முன்பாகவே ' தொண்டையர் ' என்ற ஒரு பெயர் இருப்பதாக அவர் கூறுகிறார். காஞ்சி, திருவேங்கடம் முதலிய பகுதிகள் அடங்கிய நாட்டைத் தொன்று தொட்டு ஆட்சி செய்து வந்த ஒரு மரபினரே ' தொண்டையர் ' என்று கூறும் அவர், " தொண்டையர் மருகனே " என்ற பெரும்பாணாற்றுப் பாடல் வரிகளையும் சான்று காட்டி நிற்கிறார்.

எனவே, இளந்திரையனுக்குத் தொண்டைமான் என்பது காரணப்பெயர் அல்ல. மரபுப் பெயர்தான் என்பது இதன் மூலம் புலனாகிறது.

2 . 2 . 2 . தொண்டைமான் இளந்திரையனின் பிற சிறப்புக்கள்

இளந்திரையன், நாடாண்ட மன்னவனாக மட்டும் அல்லாமல் சிறந்த புலவனாகவும் இருந்திருக்கிறான். அவன் பாடியனவாக புறநானூற்றில் ஓர் பாடலும் ( புறம் 185 ), நற்றிணையில் 3 பாடல்களும் ( 96, 99, 106 ) கிடைக்கப் பெற்றுள்ளன.

' இளந்திரையம் ' என்ற நூல் ஒன்றை இளந்திரையன் எழுதியிருப்பதாக இறையனார் அகப் பொருள் உரையும், மயிலை நாதர் உரையும் உரைக்கின்றன.

தொண்டைமானின் பிற சிறப்புக்கள எடுத்துக் காட்டுவனாக ' யாப்பருங்கல விருத்தி ' மேற்கோள்கள் விளங்குகின்றன.

2 . 3 . இளந்திரையனுக்குப் பின் வந்தவர்கள் யார்? யார்?

தொண்டைமான் இளந்திரையன் காலத்திற்குப் பின்வரும், தொண்டைமான் அரசர்கள் பலர் வாழ்ந்ததாகவும், அவர்கள் நாடு போற்றும் நல்ல பல கோவில்களைக் கட்டுவித்ததாகவும் சொல்கின்றனர். ஆனால், இதற்கான வரலாற்று ஆதாரங்கள் உண்டா?..... தெரியவில்லை.

2 . 3 . 0 . சிற்றிலக்கிய காலத்தில், தொண்டைமான் சிற்றரசன் - படைத்தலைவன்

கி. பி. 11 ஆம் நூற்றாண்டில் எழுந்த நூல் கலிங்கத்துப் பரணி. சோழமன்னன் முதலாம் குலோத்துங்கன், கலிங்கமன்னன் அனந்தபத்மநாபனை வென்ற வெற்றியைச் சிறப்பித்துப் பாடுவது இந்நூல்.

கலிங்கத்துப் போரில், சோழ மன்னனின் படைத்தலைவனாக இருந்து போர் செய்து வெற்றியைச் சோழமன்னனுக்குப் பரிசாகத் தந்தவன் கருணாகரத் தொண்டைமான் என்னும் சிற்றரசன் என்று வரலாறு கூறுகிறது.

2 . 3 . 1 . கருணாகரத் தொண்டைமான் பற்றிய கல் வெட்டுக்கள்

காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாள் கோவில் கல்வெட்டின் மூலம், " கருணாகரன் செய்த தவத்தால் அமைந்த மனைவியின் பெயர் ' அழகிய மணவாளினி தேவி ' என்று தெரிய வருகிறது. "

இடர்க் கரம்பைக் கல்வெட்டின் மூலம், கருணாகரத் தொண்டைமான் செய்த கலிங்கப் போர் பற்றிய செய்திகளையும், அவன் நல்கிய அறக்

கொடைகள் பற்றிய செய்திகளையும், அறிய முடிகிறது. [ ஆந்திர மாநிலத்தில், இராஜ மகேந்திரபுரம் அருகில் உள்ள ‘ திராட்சாராமம் ‘ என்ற ஊரே, சோழர் காலத்தில் இடர்க்கரம்பை என்ற தூய தமிழ்ப் பெயராக மாறி இருக்கிறது ]

‘ கருணாகரத் தொண்டைமான் ‘ என்ற நூலை எழுதிய குடவாயில் பாலசுப்பிரமணியன் என்பவர், “ ஜெயங்கொண்டாரின் ‘கலிங்கத்துப் பரணி’ என்ற இலக்கியம் ஓர் உண்மையான வரலாற்றுக் காவியம் “ என்பதை இடர்க்கரம்பைக் கல்வெட்டு மெய்ப்பிப்பதாக குறிப்பிட்டிருக்கிறார்.

2 . 3 . 2 . பிற சிறப்புக்கள்

திருவாரூர் உலா என்ற நூலில் ( வீரராகவ முதலியார், திருவாரூர் உலா ) “ திருவாருர் தியாகராசப் பெருமான், கருணாகரத் தொண்டைமான் மீது கொண்ட மிகுந்த அன்பினால், தனக்குரிய சிறப்புப் பெயர்களில் ஒன்றாகக் ‘ கருணாகரத் தொண்டைமன் ‘ என்ற விருதினை ஏற்றுக் கொண்டார் “ என்று குடவாயில் பாலசுப்பிரமணியன் குறிப்பிட்டிருக்கிறார்.

2 . 3 . 3 . கருணாகரத் தொண்டைமான் வரலாற்றுக் குறிப்புகள்

கி. பி. 11 ஆம் நூற்றாண்டில், தொண்டைமான்கள் சிற்றரசர்களாகவும், படைத்தலைவனாகவும் இருந்து செயலாற்றியதை உணர்த்தியிருக்கின்றன.

2 . 4 . புதுக்கோட்டைத் தொண்டைமான் அரசர்கள் [ 1686 - 1948 ]

கரம்பக் குடி கள்ளர் மரபினரின் வழித் தோன்றலாகிய ஆவுடை ராயத் தொண்டைமானின் காலத்தில் இருந்து புதுகோட்டை தொண்டைமான் அரசு தோன்றியிருக்கிறது.

1. ரெகுநாத ராயத் தொண்டைமான் : - ( கி. பி. 1686 - 1730 )

இவர், ஆவுடை ராயத் தொண்டைமானின் மைந்தர். இவரே புதுக்கோட்டை மன்னர்களில் முதல் மன்னர் ஆவார்.

இவர், தனது செயற்கரும் செயல்களால் தந்தையை விஞ்சிய தனயனாக விளங்கியிருக்கிறார். இராமேஸ்வரம் செல்லும் யாத்திரிகர்களைத் துன்புறுத்திய கொள்ளயரை அடக்கியதால், ‘ இராம மடம் ‘ வகையைச் சார்ந்த வைரம் பதித்த கழுத்து மாலை ஒன்றையும், மற்றொரு முறை இவர் செய்த வீரச்செயலைப் பாராட்டி, ‘ பெரிய ராம பாணம் ‘ என்ற பெரிய வாளையும், அப்போது தஞ்சையை ஆண்ட ‘ அச்சுத விஜய ராகவ நாயக்கர் ‘

வழங்கிப் பாராட்டியிருக்கிறார். அவை இன்றும் புதுகோட்டை அரச குடும்பத்தினரால் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இவருக்குப் பின்,

2. விஜய ரகுநாத ராய தொண்டைமான் : - ( கி. பி. 1730 - கி. பி. 1769 )
3. இராய ரகுநாத தொண்டைமான் : - ( கி. பி. 1769 - கி. பி. 1789 )
4. இராஜ விஜய ரகுநாதத் தொண்டைமான் ; - ( கி. பி. 1789 - கி. பி. 1807 )
5. இராஜா விஜய ரகுநாத ராயத் தொண்டைமான் பகதூர் : - ( கி. பி. 1807 - கி. பி. 1825 )
6. H. H. இராஜா ரகுநாதத் தொண்டைமான் பகதூர் ; - ( கி. பி. 1825 - கி. பி. 1839 )
7. H. H. ஸ்ரீ பிரகதாம்பாள் தாஸ் ராமச் சந்திரத் தொண்டைமான் ; - ( கி. பி. 1839 - கி. பி. 1886 )
8. H. H. ஸ்ரீ பிரகதாம்பாள் தாஸ் ராஜா மார்தாண்ட பைரவ தொண்டைமான் ; - ( கி. பி. 1886 - கி. பி. 1928 )
9. H. H. ஸ்ரீ பிரகதாம்பாள் தாஸ் இராஜா ராஜகோபாலத் தொண்டைமான் ; - ( கி. பி. 1928 - கி. பி. 1947 )

### 2 . 4 . 1 . ஆட்சி முறைகள், செயல்பாடுகள்

புதுகோட்டை மன்னர்களின் ஆட்சிக் காலத்தில், புதுகோட்டைப் பகுதியில் மூன்று முறை புதிய கோட்டைகள் கட்டப்பட்டிருக்கின்றன. நாடு, கூற்றங்களாகவும் கோட்டங்களாகவும் பிரிக்கப்பட்டு, பல வளர்ச்சிகளைக் கண்டிருக்கின்றன. கலைகள் வளர்க்கப்பட்டிருக்கின்றன. இலக்கியங்கள் படைக்கப்பட்டிருக்கின்றன. போர்கள் ஏற்பட்ட கட்டாயச் சூழல்களின் போது அவற்றையெல்லாம் வீரத்தோடும், விவேகத்தோடும் திறமையுடன் சமாளித்து நாட்டைப் பாதுகாத்திருக்கின்றனர்.

நிர்வாகத்தில் டார்ட்டன் பர்க், சேஷய்யா சாஸ்திரியார், வில்லியம் டாட்டர் ஹாம் போன்றவர்களை உதவியாக வைத்துக் கொண்டு பல மாற்றங்களையும், பற்பல சீர்திருத்தங்களயும் செய்து, நாட்டு மக்களின் நல் ஆதரவைப் பெற்று, சிறப்பாக ஆட்சி செய்திருக்கின்றனர். அவ்வக்காலங்களில் ஏற்பட்ட சோதனைகளைத் தங்கள் அறிவுக் கூர்மையாலும், செயல் திறனாலும் வென்று நல்லாட்சி புரிந்து வந்திருக்கின்றனர்.

### 2 . 4 . 2 . புதுக்கோட்டை சமஸ்தானம், இந்திய யூனியனுடன் இணைக்கப்படல்

1948 ஆம் ஆண்டு, ராஜா ராஜகோபாலத் தொண்டைமான் அவர்கள், சர்தார் வல்லபாய் பட்டேல் அவர்களின் கோரிக்கையை ஏற்று, புதுக்கோட்டை சமஸ்தானத்தை இந்திய யூனியனுடன் இணைத்து சாசனங்களில் கையொப்பமிட்டார். அத்தோடு, புதுக்கோட்டையில் புதிதாகக் கட்டிய அழகிய அரண்மனையையும் அரசுக்கு அளித்தார். அரண்மனை கஜானாவில் இருந்த 68 லட்சம் ரூபாய் பணத்தையும் அரசுக்கு விட்டுக் கொடுத்தார். தான் ஒரு இராஜ ரிஷியாக பிரம்மச்சரியம் காத்து, திருச்சி அரண்மனையில் வாழ்ந்தார்.

வீரத்தின் அடிப்படையில் தோன்றி வளர்ந்த தொண்டைமான் அரசின் இந்தத் தியாகம் இன்றும் சரித்திர ஆசிரியர்களலும், அறிஞர்களாலும் பாராட்டப்பட்டு வருகிறது. மன்னர் பரம்பரை இன்று வரையும் மதிக்கப்பட்டு வருகிறது.

2 . 5 . தொண்டைமான் மன்னர்களின் இறைப்பணி

தொண்டைமான் மன்னர்கள் பல்வேறு இடங்களில் ஆலயங்கள் கட்டுவித்திருக்கிறார்கள்

2 . 5 . 1 . திருமலை - திருப்பதி ஸ்ரீ வெங்கடாஜலபதி கோவில்

‘ திருமலை மகாத்மியம் ‘ என்ற நூலும், ‘ திருமலை - திருப்பதி வெங்கடாஜலபதி ஜீவ சரித்திரம் - ஸ்தல புராணம் ‘ என்ற நூலும் திருமலை - திருப்பதி ஸ்ரீ வெங்கடாஜலபதி கோவில், ஒரு தொண்டைமான் அரசால் கட்டப்பட்டது என குறிப்பிட்டுள்ளன.

ஸ்ரீ பண்டிதப் பர்வேரி வித்வான் சிரோமணி, சக்கரவர்த்தி ஸ்ரீனிவாசச்சாரியார் என்பவர், நாராயண மூர்த்தியாகிய ஸ்ரீனிவாசப் பெருமாள், தொண்டைமானிடம் ஸ்ரீ வராக சுவாமி புஸ்கர்ணியின் பக்கத்தில் தனக்கு ஒரு கோவில் கட்டித் தருமாறு அருள் ஆணையிட்டதாகவும், அதன்படி கட்டப்பட்ட கோவில்தான் “ திருமலை - திருப்பதி வெங்கடாஜலபதி கோவில் “ என்று குறிப்பிட்டுள்ளார். [ ஸ்ரீனிவாசச் சாரியார், திருமலை - திருப்பதி வெங்கடாஜலபதி கோவில் ]

ஸ்ரீனிவாசச் சாரியார் நூலிலுங்கூட, கோவில்களைக் கட்டியது தொண்டைமான் என்றுதான் குறிப்பிட்டுள்ளதே தவிர அவரது தனிப்பெயர் குறிப்பிடப்படவில்லை. ஆனால், வேறு சில நூல்களில் அவரது பெயர் ‘ முனியத் தொண்டைமான் ‘ என்று காணக் கிடக்கிறதாம்.

2 . 5 . 2 . வட திருமுல்லை வாயில், ஸ்ரீ மாசிலாமணீஸ்வரர் ஆலயம்

‘ புழல் ‘ பகுதியில் ஆட்சி புரிந்த ஓணன், காந்தன் என்னும் இரு குறும்பர்களை ஒடுக்கக் காஞ்சி மாநகரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்த தொண்டைமான் சக்கரவர்த்தி திக்விஜயம் செய்து வந்தபோது, ஓணன், காந்தன் இருவரையும் சமாளிக்க முடியாமல் பின் வாங்க நேர்ந்திருக்கிறது. அப்போது ஒரிடத்தில், தொண்டைமான் ஏறி வந்த யானையின் கால்களில் முல்லைக்கொடி சுற்றிக்கொள்ள, யானை மீது அமர்ந்திருந்தபடியே, தன் கையில் இருந்த நீண்ட வாளினால் சக்கரவர்த்தி அக்கொடிகளை வெட்ட, அப்போது பூமியில் இருந்து இரத்தம் பீறிட்டு வந்திருக்கிறது.



கீழே இறங்கி வந்த தொண்டைமான், முல்லைக் கொடிகளை அகற்றிப் பார்த்தபோது, அங்கே இருந்த சிவலிங்கத்தின் தலையில் இரத்தம் வருவதைக் கண்டிருக்கிறான். தன் தவறுக்கு வருந்தித் தனது உயிரை மாய்த்துக் கொள்ள முற்பட்ட போது, இறைவன் தோன்றி, " மன்னா, வருந்தாதே, வெட்டுப்பட்டாலும் நான் மாசில்லாமணி. குறும்பர்களை வென்றிட உனக்குத் துணையாக நந்தியை அனுப்புகிறேன்.. அவர்களை வென்ற பின் இவ்விடத்தில் எனக்கு ஆலயம் எழுப்புவாயாக ", என அருள் வாக்கு அருளியிருக்கிறார். அதன்படியே அங்கே ஆலயம் எழுப்பியிருக்கிறான் தொண்டைமான்.

இது, புராணக் கதைபோல் தோன்றினாலும் தொண்டைமான் சக்கரவர்த்தியின் இந்த வரலாறு, ஆலயத்தின் மதில்மீது சுதைச் சிற்பங்களாக வடிக்கப்பட்டிருக்கின்றன.

சுந்தரமூர்த்தி சுவாமிகளின் தேவாரப் பதிகமும் இக்கருத்தை,

" சொல்லரும் புகழான் தொண்டைமான் களிற்றை

சூழ்கொடி முல்லையால் கட்டிட்டு

எல்லையின் இன்பம் அவன்பெற வெளிப்பட்டு

அருளிய இறைவனே "

என விளக்கியிருக்கிறது.

' தொண்டைமான் சக்கரவர்த்தி வார வழிபாட்டுக் குழு ' என்ற பெயரில் ஒரு வழிபாட்டுக் குழு ' இக்கோவிலில் இன்றும் இயங்கி வருகிறது.

இத்தனைச் சான்றாதரங்களும், மன்னன் தொண்டைமான்தான், வட திரு முல்லை வாயில், ஸ்ரீ மாசிலா மணீஸ்வரர் ஆலயத்தைக் கட்டினான் என்று உறுதி அளித்தாலும், கோவிலைக் கட்டிய தொண்டைமான் மன்னன் பெயர் தெரியாமல் போனது வருத்தத்திற்குரியதே.

2 . 5 . 3 . பிள்ளையார் கோவில்

ஈழத்தில் உள்ள ' இனுவில் ' என்ற இடத்தில் கருணாகரத் தொண்டைமான் சில காலம் தங்கி இருந்ததாகவும், அப்போது அங்கே அவன் ஒரு பிள்ளையார் கோவிலைக் கட்டியதாகவும், அக்கோவில் பின்னாளில் ' கருணாகரப் பிள்ளையார் கோவில் ' என்று அழைக்கப்பட்டதாகவும்

நவரத்தினம் என்பவர் கூறியுள்ளார். [ S. நவரத்தினம், A Short History of Hinduism in Ceylon ]

2 . 5 . 4 . திருக்கோகர்ணம் ஸ்ரீ பிரகதாம்பாள் அம்மன் கோவில்

திருகோகர்ணம் ஸ்ரீ பிரகதாம்பாள் அம்மன் கோவிலை, புதுக்கோட்டைத் தொண்டைமான் மன்னர்கள் கட்டியிருக்கிறார்கள். ஆனல் எந்த மன்னன் காலத்தில் அது கட்டப்பட்டது என்பதில் தெளிவில்லை. என்றாலும், ராமச் சந்திர தொண்டைமான் காலத்திலிருந்துதான் மன்னர்கள் பெயருக்கு முன்னால் ' ஸ்ரீ பிரகதாம்பாள் தாஸ் ' என்ற அடை மொழி சேர்க்கப்பட்டது.




2 . 6 . தொண்டைமான் குல மடாலயங்கள்

தொண்டைமான் மரபினர் எந்தெந்தப் பகுதிகளில் எல்லாம் குடியேறி வாழ்ந்தனரோ அந்தந்தப் பகுதிகளில் எல்லாம் மடாலயங்கள் நிறுவப்பட்டிருக்கின்றன.

தொண்டைமான் புதுக்கோட்டை, நமன சமுத்திரம், பேரையூர், ஆவூடையார் கோவில், சிதம்பரம், காளஸ்திரி, தஞ்சாவூர், மதுரை, பழனி, திருப்பதி, மேலூர், திருப்பரங்குன்றம், கோச்சடை, சோழவந்தான், பெருமாள்பட்டி, இராமநாதபுரம், திருச்செந்தூர், திருநெல்வேலி, பாபவினாசம், சங்கர நயினார் கோவில், சேந்த மரம், தென்காசி, திருக்குற்றாலம்,

கன்னியாகுமரி, பத்மநாபுரம் குளச்சல், கண்டி, கதிர்காமம், பர்மா, ரங்கோன் என 29 இடங்களில், மடங்கள் நிறுவப்பட்டிருக்கின்றன [ தொண்டைமான் மடாலய ஆதீன விபரம் - தற்போதுள்ளது, தொண்டைமான் புதுக்கோட்டை சமஸ்தான வெளியீடு ] என்றாலும் இப்போது, திருச்செந்தூரிலும், திருக்குற்றாலத்திலும் உள்ள மடங்கள் மட்டுமே செயல்பாட்டில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

இந்த வகையில், தொண்டைமான் மன்னர்கள் இறைவனுக்கும், மக்களுக்கும் தொண்டாற்றி இருக்கின்றனர்.

2 . 6 . 0 . தொண்டைமான் சமூகத்தினரின் இன்றைய நிலை

எந்த ஒரு சமூகத்திலும், மேல்தட்டு வர்க்கம், நடுத்தட்டு வர்க்கம், கீழ்த்தட்டு வர்க்கம் என்ற மூன்று தட்டு வர்க்க மக்களைப் பெரும்பாலும் பார்க்க முடியும். தொண்டைமான் சமூகத்திலும் அப்படியொரு மூன்று தட்டு வர்க்க மக்களைக் காணமுடிகிறது.

2 . 6 . 1 . தொண்டைமான் குல மேல் தட்டு வர்க்கம்

மேல்தட்டு வர்க்கத்திலே, இன்றைக்கும் அரச பரம்பரையின் வாரிசுகள், துப்பாக்கிச் சுடுவதிலும், படகுப் போட்டியிலும் வெற்றிபெறும் வல்லவர்களாக விளங்குகின்றனர். அரசியலில் ஈடுபட்டும் வருகின்றனர்..

2 . 6 . 2 . தொண்டைமான் குல நடுத்தட்டு வர்க்கம்

நடுத்தட்டு வர்க்கத் தொண்டைமான் குலமக்களில், ஆசிரியர்களாக, வக்கீல்களாக, மருத்துவர்களாக, பொறியியலாளர்களாக, தொழில் அதிபர்களாக பணிபுரிந்து கொண்டிருக்கின்றனர்.

IAS, IPS தேர்வுகளில் தேறி, ஆட்சியாளர்களாக, காவல் துறையின் உயர் அதிகாரிகளாகப் பலர் உயர் பதவிகளில் வீற்றிருந்தார்கள். இன்னும் சிலர் வீற்றிருக்கிறார்கள்.

நடுத்தர வர்க்கத்தில் ' சாகித்திய அகாடமி ' போன்ற உயரிய விருதுகள் பெற்றவர்கள் உண்டு. எழுத்துலகில் கவிஞர்களாய், நாவலாசிரியர்களாய், சிறுகதை ஆசிரியர்களாய், வரலாற்று நூலாசிரியர்களாய், மொழிபெயர்ப்பாளர்களாய், கட்டுரை ஆசிரியர்களாய்த் தடம் பதித்துச் சென்ற முற்போக்கு எழுத்தாளர்கள் இந்த நடுத்தட்டு வர்க்கத்தில் இருந்ததுண்டு.

ஆன்மீக எழுத்தாளர்கள் இருந்ததுண்டு. இன்றும் எழுதிக் கொண்டிருப்பவர்கள் பலர் உண்டு.

2 . 6 . 3 . தொண்டைமான் குல கீழ்த்தட்டு வர்க்கம்

கல்வியிலும், பொருளாதாரத்திலும் பின் தங்கியிருக்கின்ற மக்களை இன்றும் கீழ்த்தட்டு வர்க்கத்தில் காண முடிகிறது. ' செய்யும் தொழிலே தெய்வம் ' என்று அவர்கள் பல்வேறு நேர்மையான தொழில்களைச் செய்து வருகின்றனர்.

2 . 6 . 4 . முடிவுரை

தொண்டைமான் குலத்தின் கீழ்த்தட்டு மக்களின் தரம் உயர, மேல்தட்டு, நடுத்தட்டு வர்க்க மக்களும், வெளிநாடு வாழ் தொண்டைமான் குல மக்களும் முன்வர வேண்டும்.

கீழ்த்தட்டு மக்களின் வாழ்வில் வளமும், வாழ்க்கைத் தரமும் உயர்ந்தால்தான் தொண்டைமான் குலச் சமுதாயத்தின் வளர்ச்சி முழுமை பெறும்.